சட்டமன்ற உறுப்பினர்கள் அதிகளவில் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை மீண்டும், மீண்டும் கொடுத்துக்கொண்டேயிருக்கிறீர்கள். உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நீங்கள் தடுப்பதாக நான் சொல்லவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும், மீண்டும் அந்தக் கூட்டத்தைப்போட்டு, அந்த விவசாயிகளை, 'நீங்கள் விடாதீர்கள்' என்று சொல்கின்றபோதுதான், தமிழகத்தின் நலன் பாதிக்கப்படக்கூடும் என்ற அடிப்படையிலேதான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் சொல்ல வேண்டிய கடமைக்காக சொன்னேன்.

(இ) அரசு விழாக்களுக்கான அழைப்பிதழ்கள் சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெறாதது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, மாண்புமிகு உறுப்பினர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின், உட்காருங்கள். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) இந்த விவாதம் இதோடு போதும். (குறுக்கீடு) இன்றைக்கு காவல் துறை மற்றும் தீயணைப்புத் துறை பற்றிய இரண்டு முக்கியமான மானியக் கோரிக்கைகள் உள்ளன. அந்த இரண்டு மானியக் கோரிக்கைகளுக்கும் அதிக நேரம் ஆகும். அதுமட்டுமல்ல, இதில் தொடர்ந்து பேசினால், பெரிய விவாதமாகப் போகும். அதற்கு மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை உள்ளது. மேலும், இன்று மாலையில் ஒரு விழா இப்பேரவையில் நடக்க இருக்கிறது. அதில் நீங்கள் எல்லோரும் கலந்துகொள்ள வேண்டும். ஆகவே, விவாதம் தொடர்ந்து வேறு வகையில் போவதற்கு வாய்ப்பில்லை. (குறுக்கீடு) இல்லை, நான் வாய்ப்புத் தர முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, நான் வாய்ப்புத் தர முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள் திரு. பிரின்ஸ், எல்லா உறுப்பினர்களும் தங்களுக்கு வாய்ப்புத் தர வேண்டும் என்று கேட்டால், கொடுப்பதற்கு எனக்கு இன்று நேரம் இல்லை. நேற்று மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுவதற்கு நான் அனுமதித்தேன். இன்றைக்கு அதற்கான வாய்ப்பு இல்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முக்கியமாக ஏதாவது கேட்க விரும்பினால், வாய்ப்புத் தருகிறேன், சொல்லுங்கள்.

2019 ஜூலை 19]

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்கள், அவருடைய மாவட்டத்தில் நடந்ததைப் பற்றி, தொகுதிகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளில், விளம்பரம் செய்யப்படுகின்ற வேளையில், அவருடைய பெயரைப் போடாமல், டெல்லி பிரதிநிதியின் பெயரைப் போட்டு நிகழ்ச்சி நடப்பதாக உங்களிடம் ஓர் உரிமை மீறல் பிரச்சினையைக் கொடுத்திருக்கிறார். அவர் கொடுத்து நான்கைந்து நாட்களாகி விட்டன. அது குறித்து உங்களிடம் விளக்கம் கேட்க விரும்புகிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, உட்காருங்கள். அந்தப் பிரச்சினையைக் குறித்து, அவர் என்னிடம் தெளிவாகத் தெரிவித்து, சட்டமன்ற உறுப்பினர்களை அரசு நிகழ்ச்சிகளுக்கு அழைப்பதில்லை என்று சொன்னார். நான் அதற்குண்டான நடவடிக்கைகளை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெரிவித்திருக்கிறேன். அவர் உரிமை மீறல் என்ற அடிப்படையில் கொடுத்திருக்கிறார். எனவே, அதற்குரிய விளக்கத்தை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கேட்டிருக்கிறேன். அதற்குரிய பதில் எனக்கு வந்த பிறகு, அது உரிமை மீறலில் வருகிறதா இல்லையா என்பதை முடிவு எடுத்து, அதற்குப் பிறகுதான் அறிவிக்க முடியும். அவர் கேட்பதுபோல் திடீரென்று என்னால் ஒன்றும் செய்ய முடியாது. (குறுக்கீடு) திரு. ஆஸ்டின் இது குறித்து காலையில் நீங்கள் என்னுடைய அறைக்கு வந்தபோது, அப்போதே நான் விளக்கமாக உங்களுக்குத் தெரிவித்துவிட்டேன். நீங்கள், மீண்டும், மீண்டும் அதைப் பேசுவதிலேயே குறியாக இருக்கிறீர்கள். ஆகவே, அதற்காக நான் அனுமதியை இப்போது இந்த அவையில் தர முடியாது. முதலில் எனக்கு பதில் வரட்டும், பிறகு நான் அதைப் பற்றி என்னுடைய முடிவைச் சொல்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுங்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டுமல்ல, திரு. ஆஸ்டின் தொகுதியில் மட்டுமல்ல, கரூர் தொகுதியில், அரவக்குறிச்சி தொகுதியில் இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள், ஒட்டுமொத்த தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதிகளில் இதுபோன்ற பிரச்சினை இருந்து கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதையும் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதற்கும் நீங்கள் உரிய முடிவினை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்கள் உரிமை மீறல் என்கிற அடிப்படையில் கொடுத்ததால், உரிய விளக்கம் வராமல் அது உரிமை மீறலா என்பது குறித்து நான் முடிவெடுக்க முடியாது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். சட்டமன்றத் தொகுதியில் நடைபெறும் விழாக்களுக்கு சம்பந்தப்பட்ட தொகுதியினுடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களை அழைக்க வேண்டுமென்ற வேண்டுகோளை என்னிடம் வைத்துள்ளீர்கள். இதுகுறித்து அதிகாரிகளுக்கு நான் ஏற்கெனவே தெளிவாக உத்தரவினை வழங்கியிருக்கிறேன். மீண்டும் ஒரு முறை நான் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களை அரசு விழாக்களுக்கு அழைக்க வேண்டுமென்று உரிய அறிவுரைகள் அதிகாரிகளுக்கு வழங்கப்படும் என்ற உறுதியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் இதுபோன்ற நிகழ்வுகள் நடைபெறுவதாக இங்கே சொன்னார். அது தவறான தகவல். (குறுக்கீடுகள்) நான் முடித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்) நான் முடித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்) நான் பேசி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்) என்னுடைய. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர், ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இது சரியான முறையில்லை. இல்லையில்லை, இல்லையில்லை. நீங்கள் கேட்கிற வாய்ப்பை அளவுக்குமீறி நான் வழங்க வேண்டுமென்று சொன்னால் அது எனக்கு முறையாக இருக்க வேண்டும். இப்படி நீங்கள் ஒரே முறையில் பேசிக்கொண்டேயிருந்தால் நான் யாருக்கு வாய்ப்பு அளிப்பது என்பது தெரியாமல் போய்விடுகிறது. அதுமட்டுமல்ல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும்,

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் விளக்கத்தை சொல்வதற்காக எழுந்திருக்கும்போது வேண்டுமென்றே நீங்கள் பேசுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) இல்லையில்லை. அதெல்லாம் முறையில்லை. (குறுக்கீடுகள்) இல்லையில்லை. முறையில்லை. இது அவையை நடத்துவதற்கு சரியாக வராது. இதை வன்மையாக மீண்டும் ஒரு முறை நான் கண்டிக்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம், மஞ்சளாறு அணைப் பகுதியின் உள்பகுதியில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீட்டுமனைகள் ஒதுக்கப்பட்டு, அதற்கு கட்டடங்கள் கட்டுவதற்காக அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. சம்பந்தப்பட்ட துறை அதிகாரியிடம் பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினரை விழாவிற்கு அழைக்க வேண்டுமென்று நானே சொன்னேன். அந்த அதிகாரி சட்டமன்ற உறுப்பினரை அழைத்து, அவரும் விழாவில் கலந்துகொண்டார்.

அதற்குப்பிறகு, மின்சாரத் துறையின் மூலமாக சில அரசு விழாக்கள் நடத்தப்பட்டன. அந்த விழாக்களுக்கும், ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினரையும், பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினரையும் அழைக்க வேண்டுமென்று சொன்னேன். இனிமேல் எந்த அரசு விழா நடைபெறுவதாக இருந்தாலும் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும் விழாக்களுக்கு அழைக்க வேண்டுமென்று சொன்னேன். அதிகாரி ஒருவர் மூலமாக முறைப்படி, நேரடியாகச் சென்று அவர்களுக்கு அழைப்பிதழ் வைத்து அழைக்க வேண்டுமென்று சொன்னேன். அதன்படி, அவர்களும் அரசு விழாக்களில் கலந்துகொண்டு சிறப்பித்திருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதைத்தான் நான் சொல்ல வந்தேன். (குறுக்கீடுகள்) இல்லை, நடைபெற்றது. (குறுக்கீடுகள்) சில மாவட்டங்களில் இதுமாதிரியான பிரச்சினைகள் ஏதாவது அப்படி இருக்குமேயானால் அதை அரசினுடைய கவனத்திற்கு அவர்கள் கொண்டு வந்தால், அதற்கு உடனடியாகத் தீர்வு காணப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள் ஒரு பேப்பரை உயர்த்திக் காண்பித்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், அவருடைய மாவட்டத்தில், அவருடைய தொகுதியில் நடைபெற்ற அரசு விழாக்களுக்கு எதிர்க்கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முறையாக அழைப்பிதழ் அனுப்பப்பட்டிருந்ததாகவும், சட்டமன்ற உறுப்பினர்களும் விழாவில் கலந்து கொண்டார்கள் எனவும் இங்கே தெரிவித்தார். அழைப்பிதழ் அனுப்பப்பட்டவுடனேயே சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் என்னிடம் தொலைபேசியில் தொடர்புகொண்டு, 'அரசு விழாவில் கலந்துகொள்வதற்கான அழைப்பிதழ் வந்திருக்கிறது. அதில் நாங்கள் கலந்துகொள்ளலாமா' என்று கேட்டார்கள். அரசு விழாக்களில் கலந்துகொள்வதற்கான அழைப்பிதழ் அரசிடமிருந்து வந்திருந்தால் கண்டிப்பாக விழாக்களில் கலந்துகொள்ள வேண்டும். ஏன்? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்துகொண்ட சேலத்தில் நடைபெற்ற விழாவிற்குக்கூட, ஆளுங்கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், எங்கள் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பிதழ் அனுப்பப்பட்டிருந்தது. அப்போது, நாடாளுமன்ற உறுப்பினர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் இந்த விழாவில் கலந்துகொள்ளலாமா என்று என்னிடம் கேட்டபோது விழாவில் கலந்துகொள்ள வேண்டுமென்றுதான் நானும் சொன்னேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தொகுதியிலேயும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடைய தொகுதியிலேயும் அல்லது மாவட்டங்களிலேயும் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளுக்கு அழைப்பிதழ் அனுப்பப்படுகிறது. சில இடங்களில் பெயர்கூட போடுவதில்லை. தொலைபேசியில்தான் சொல்கிறார்கள். அந்த நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ள வேண்டுமென்றுதான் நான் சொல்கிறேன். குறிப்பிட்ட சில மாவட்டங்களில் வேண்டுமென்றே, திட்டமிட்டு எந்த நிகழ்ச்சிகளுக்கும் அழைப்பதில்லை. ஆக, சம்பந்தமில்லாதவர்கள் அந்த நிகழ்ச்சிகளிலே கலந்துகொள்ளக்கூடிய சூழ்நிலையில், உரிமை பெற்றிருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ள முடியாத ஒரு சூழ்நிலைதான் இருக்கிறது. ஆய்வுக் கூட்டங்களும் நடத்தப்படுகின்றன. கரூர் மாவட்டத்திலும் அண்மையில் நடந்து முடிந்திருக்கிறது. அந்தக் கூட்டத்தில் ஆளுங்கட்சியைச்

சார்ந்த பல சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை. அதைத்தான் அவையினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வந்திருக்கிறேன். ஆக, இதற்கு பிறகாவது ஒரு நல்ல முடிவு வரும். அந்தச் சூழ்நிலையில்தான் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் விளக்கங்கள் அளித்திருக்கிறார்கள். இது முறைப்படுத்தப்பட வேண்டுமென்பதுதான் எங்களுடைய எண்ணம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்கள் ஒரு photo-வை காட்டி 'எங்களை அழைக்கவில்லை' என்று சொன்னார்கள். ஒகி புயல் பாதிப்பின்போது நாங்கள் பத்து நாட்கள் அங்கேயே இருந்தோம். பத்து நாட்களிலும் 6 சட்டமன்ற உறுப்பினர்களிடமும் நானே பேசி அவர்களை வரச்சொன்னேன். ஒரு நாள் வந்தீர்கள். மற்ற நாட்களில், தினசரி நாங்கள் அங்கு ஆய்வுக் கூட்டம் நடத்திக்கொண்டிருந்தோம். எத்தனை நாள் வந்தீர்கள்? நாங்கள் உங்களைக் கூப்பிடவில்லை என்று சொன்னால் நீங்கள் வருத்தப்படுங்கள். நாங்கள் அப்போது தினந்தோறும் அழைத்தோம். அவ்வாறு அழைத்ததில் ஒரே ஒருநாள் மட்டும் வந்தீர்கள். மற்றொரு நாளில் மாண்புமிகு உறுப்பினர் திரு. மனோ தங்கராஜ் வந்தார். மற்றவர்கள் யாருமே வரவில்லை. 'நாங்கள் அழைக்கவில்லை' என்று சொல்லாதீர்கள். எங்களது மாவட்டத்தினைப் பொறுத்தவரை உங்களது பரமத்தி-வேலூர் சட்டமன்ற உறுப்பினர் விழாவிற்கு வருவதில்லை. ஆனால், அங்கு விழா நடக்கும் இடங்களில் அனைத்து கல்வெட்டுகளிலும் நாங்கள் அவரது பெயரினைப் போட்டுக்கொண்டுதான் இருக்கிறோம். ஆய்வுக் கூட்டம் நடக்கும்போது அவர் வந்துகொண்டுதான் இருக்கிறார். நாங்கள் அனைவரையும் அழைத்துக்கொண்டுதான் இருக்கிறோம். (குறுக்கீடுகள்) கரூர் மாவட்டம் பற்றிச் சொன்னீர்கள், கரூரில் அமைச்சர் அழைத்திருக்க மாட்டார். ஆனால், அதிகாரிகள் அழைத்திருப்பார்கள். அமைச்சர் விழாவிற்கு உறுப்பினர் அவர்கள்*

போகக் கூடாது என்று எண்ணி போயிருக்கமாட்டார்கள். அவர்கள், இங்கு வந்து வேண்டுமென்றே சொல்கிறார்கள். அவ்வளவுதான். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, (குறுக்கீடுகள்) போதும். (குறுக்கீடுகள்) ஏற்கெனவே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அனைத்தும் பேசிவிட்டார்கள். அதுகுறித்து மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் மற்றவர்களும் விளக்கமும் அளித்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) நான் அதிகாரிகளுக்குத் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் முறையான அழைப்பை அளித்து விழாக்களை நடத்த வேண்டும் என்ற உத்தரவினை வழங்க வேண்டும் என்று நான் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இது சம்பந்தமாக வேண்டாம். (குறுக்கீடுகள்) வேண்டாம் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இதுசம்பந்தமாகப் போதும். (குறுக்கீடுகள்) இதுசம்பந்தமாக நிறைய விவாதித்துவிட்டோம். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இதுசம்பந்தமாக இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) ஆவடி மாநகராட்சிச் சட்டமுன்வடிவு, 2019

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2019 ஆம் ஆண்டு ஆவடி மாநகராட்சிச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2019 ஆம் ஆண்டு ஆவடி மாநகராட்சிச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.